# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2199/1 - 2020 ඔක්තෝබර් මස 26 වැනි සඳුදා - 2020.10.26

*2199/1 ஆம் இலக்கம் - 2020 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 26 ஆந் திகதி திங்கட்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I) - பொது

### அரசாங்க அறிவித்தல்கள்

**2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க விசேட வியாபாரப் பண்டங்கள் அறவீட்டுச் சட்டம்**

2 ஆம் பிரிவின் கீழான கட்டளை

2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க, விசேட வியாபாரப் பண்டங்கள் அறவீட்டுச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ், எனக்கு உரித்தாக்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கமைய, இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் நிதி அமைச்சர் மஹிந்த ராஜபக்ஷ ஆகிய நான், இக்கட்டளை மூலம் இதற்கான அட்டவணையின் I ஆம் நிரலில் குறித்துரைக்கப்படும் வியாபாரப் பண்ட இனம் தொடர்பில், அவ் அட்டவணையின் II ஆம் நிரலில் உள்ள நேரொத்த பதிவீடுகளில் குறித்துரைக்கப்படும் பெறுமதியில் விசேட வியாபாரப் பண்ட அறவீடொன்றை விதிக்கின்றேன்.

இக்கட்டளை, 2020 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 27 ஆந் திகதி முதல் ஆரம்பமாகும் 06 மாத காலப்பகுதிக்காக, 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க, விசேட வியாபாரப் பண்டங்கள் அறவீட்டுச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் (3) ஆம் உப பிரிவின் ஏற்பாடுகளுக்கு அமைவாக செல்லுபடியுடையதாதல் வேண்டும்.

2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க விசேட வியாபாரப் பண்டங்கள் அறவீட்டுச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ் கட்டளை இடப்பட்டு வெளியிடப்பட்ட 2020.07.31 ஆந் ஆந் திகதிய 2186/32 ஆம் இலக்க அதிவிசேட வரத்தமானி அறிவித்தல், 2020.09.03 ஆந் திகதிய 2191/26 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் மீன் தொடர்பான அறிவித்தல் மற்றும் 2020.07.18 ஆந் திகதிய 2184/53 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் மாசி மீன் தொடர்பான அறிவித்தல் ஆகியவை 2020 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 27 ஆந் திகதி முதல் பயன்வலுப் பெறுமாறு இத்தால் இரத்துச் செய்யப்படுகின்றது.

**மஹிந்த ராஜபக்ஷ,**
நிதி அமைச்சர்.

நிதி அமைச்சு,
கொழும்பு 01,
2020, ஒற்றோபர் 26.


1A - PG 5202 — 570 (2020/10)

இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

**கவனிக்க.-** 2198/1 ஆம் இலக்கம் கொண்ட அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகைத் தொடரின் இறுதி இலக்கம் 2198/59 ஆகும்.

**அட்டவணை**

| I ஆம் நிரல் | | | | II ஆம் நிரல் |
|---|---|---|---|---|
| வியாபாரப் பண்ட இனம் | | | | விசேட வியாபாரப் பண்ட அறவீடு |
| | இ. மு. தலைப்பு | இ. மு. குறியீடு | விவரணம் | |
| 1 | 03.02 | | மீன், புதிய அல்லது குளிரூட்டப்பட்டவை தலைப்பு 03.04 இன் கீழ் தரப்பட்ட முள்ளற்ற துண்டுகளையும் மீன் இறைச்சியையும் தவிர்ந்தவை | 10% அல்லது ஒரு கி. கி. ரூபா 200.00 இரண்டில் எது கூடியதோ அந்த அறவீடு |
| | 03.03 | | மீன், குளிரால் உறையச் செய்யப்பட்டவை, தலைப்பு 03.04 இன் கீழான முள்ளற்ற துண்டுகள் மற்றும் பிற மீன் இறைச்சி நீங்கலாக. (குறியீடு 0303.54 இன் கீழ் வரும் மெகரல் மீன் மற்றும் 0303.55 இன் கீழ் வரும் ஜெக் மற்றும் ஹோஸ் மெகரல் - Trachurus spp./fish மீன் தவிர்ந்தவை) | 10% அல்லது ஒரு கி. கி. ரூபா 200.00 இரண்டில் எது கூடியதோ அந்த அறவீடு |
| 2 | 03.05 | 0305.54.10 | நெத்தலிகள் | ஒரு கி. கி. ரூபா 1.00 |
| 3 | | 0305.52.00<br>0305.53.00<br>0305.54.90<br>0305.59.30<br>0305.59.90 | உலர்த்திய மீன் | ஒரு கி. கி. ரூபா 127.00 |
| 4 | | 0305.59.10 | மாசி மீனும் அதற்குப் பதிலானவையும் | ஒரு கி. கி. ரூபா 302.00 |
| 5 | 07.13 | 0713.31.19 | பிற - பச்சைக் கடலை (பாசிப்பயறு) | ஒரு கி. கி. ரூபா 40.00 |
| 6 | 08.04 | 0804.50.50 | மங்குஸ்தான் பழங்கள், சோர்வற்ற புதிய | ஒரு கி. கி. ரூபா 200.00 |
| | | 0804.50.60 | மங்குஸ்தான் பழங்கள், சாறு இல்லாத காய்ந்த | ஒரு கி. கி. ரூபா 200.00 |
| 7 | 08.10 | 0810.50 | கிவி பழம் | ஒரு கி. கி. ரூபா 175.00 |
| 8 | | 0810.90.90 | பிற | ஒரு கி. கி. ரூபா 200.00 |

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.